# ஏது பயம் இறைவா

ஏது பயம் இறைவா -2
என்னுள் வாழும் உனை நம்பி -2
ஏது பயம் இறைவா

**1)**
பொய்மையில் வாழ்வுதான் நிலைக்கின்றது
வாய்மையில் வாழ்ந்திடத் துடிக்கின்றது -2
பொய்மையிலிருந்து வாய்மைக்கு அழைத்தாய்
இருளினில் இருந்து பேரொளி சேர்த்தாய்
சாவினில் இருந்து வாழ்வினில் இணைத்தாய் -2
வலிமையாய் தலைவனாய் நீ இருக்க

(ஏது பயம் இறைவா)

**2)**
லட்சியம் பணியினில் நிலை பெறவே
இன்னுயிர் பலியென நீ கொடுத்தாய் -2
பகைமையும் பசியும்.. ஆ..
பகைமையும் பசியும் சோதனைப் பலமும்
சூழ்ந்திருந்தாலும் உன் பணி தொடர்ந்தாய்
தொடங்கிய பாதையை
தொடர்ந்திடும் வேளை -2
துன்பமோ தடைகளோ என்ன செய்யும்

(ஏது பயம் இறைவா)